DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.188/2016** |
| Deposition of witness for | - P.W.1 |
| Name | - Venkatesan |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.11.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியைத் தெரியும். 2015ஆம் நான் மதுரையில் குடியிருந்தேன். நான் பிளாட் எண்:7, முத்துசெல்வி இல்லம், மலைமகள் தெரு திருவள்ளுவர் மெயின் ரோடு, நேரு நகர் மதுரையில் குடியிருந்தேன். நான் என் மனைவி கௌரி, பெரிய பொண்ணு வி.நேகா, சின்ன பொண்ணு வி.ஸ்வந்திகா. நான் டிப்ளமோ சிவில் இன் ஜினியரிங் முடித்து விட்டு பில்டிங் காண்டிராக்ட் வேலை செய்து வருகிறேன். என் மனைவி பி.எஸ்ஸி, பி.எட் முடித்து விட்டு வீட்டில் உள்ளார். 2015ல் எனது பெரிய பொண்ணு 3-வது படித்தாள். சின்ன பொண்ணு எல்.கே.ஜி படித்தாள். 1-வது எதிரி என் அம்மாவுடன் கூடப்பிறந்த தங்கச்சி மகனாவார். அவர் பி.பி.குளத்தில் குடியிருந்தார். என் மகள்கள் பள்ளிக்கு சென்றவுடன், என் மனைவி வீட்டில் பி.எட் முடித்து விட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டு வீட்டில் தனியாக இருந்த

போது, நான் வேலைக்கு சென்ற சமயம் பார்த்து எதிரியும், அவனது நண்பன் முத்துக்குமார் என்பவரும் அடிக்கடி என் வீட்டிற்கு வந்து போயிருந்தார்கள். அதை முதலில் என் மனைவி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நான் வீட்டிற்கு வரும் போது என் மனைவி விசுவும், அவர் நண்பரும் என் வீட்டிற்கு வந்தார்கள் என்று சொல்வார். நான் என்ன விசயமா என்று கேட்டதற்கு பக்கத்தில் ஒரு வேலையாக வந்ததாகவும், அண்ணன் இருக்கிறாரா என்று பார்த்து போவதற்கு வந்ததாகவும் சொன்னார்கள் என்று கூறினாள். தொடர்ந்து எதிரியும், அவரது நண்பரும் அடிக்கடி என் வீட்டிற்கு வர என் மனைவி என்னிடம் கம்ப்ளயிண்ட் சொன்னாள். அவர்கள் இருவரும் வந்து ஹாலிலேயே உட்கார்ந்து கொள்கிறார்கள். என்னால் ரெஸ்ட் எடுக்கவும் முடியலை. டாய்லெட் கூட போக முடியலை என்று சொன்னாள். அவங்க கம்ப்ளயிண்ட பண்ண மறுநாளே என் வீட்டிற்கு மறுபடியும் வந்தாங்க. அப்ப நான் கரெக்டா வேலை முடிச்சு வீட்டிற்கு வந்தேன். அப்ப நான் விஸ்வநாதன் கிட்ட என்னடா ஒரு போன் கூட பண்ணாமல் வீட்டுக்கு வந்த, இனிமேல் எப்ப வீட்டிற்கு வந்தாலும், ஒரு போன் பண்ணிட்டுதான் வரணும்னு நான் கோபமா சொன்னேன். நான் சொன்ன உடனே அவன் பிரெண்ட கூப்பிட்டு வெளிய போய்ட்டான். 2 நாள் கழித்து நான் 10.30 மணிக்கு லேட்டா வேலைக்கு கிளம்பும் போது, பிள்ளைகள் ஸ்கூலுக்கு போனவுடன் என் மனைவியிடம் அவன் என் தம்பிதானே எதற்கு அப்படி சொன்ன என்று கேட்டதற்கு, எதிரியுடன் கூட வந்த நண்பனைப் பார்த்தால் கொலைகாரன் மாதிரியே இருக்கு என்று சொன்னார். அப்படியே பேசிக் கொண்டே நான் முதல் தளத்தில் கடைசி வீட்டில் இருந்து நான் மாடிப்படியில் இறங்கி வந்து கொண்டிருந்த போது, எதிரியும் அவர் நண்பரும் வந்து கொண்டிருந்தார்கள். இந்த சம்பவம் என் மனைவி இறப்பதற்கு சுமார் 7,8 நாட்கள் முன்பு இருக்கும். இருவரையும் பார்த்து என்ன என்று கேட்டதற்கு சும்மா வந்தேன் என்று கூறினார். எதிரிதான் என்னிடம் பேசினார். முத்துக்குமார் முகத்தை காட்டாமல் திருப்பிக் கொண்டார். நான் அவர்கள் இருவரும் போகும் வரை காத்திருந்து அவர்கள் போன பிறகுதான் நான் வேலைக்கு சென்றேன். அதன்பிறகு எதிரியும், அவன் நண்பரும் வீட்டிற்கு வராததால் நானும், என் மனைவியும் அதைப் பற்றி பேசிக் கொள்ளவில்லை. ஆனால் என் மனைவி இறப்பதற்கு 3 நாட்களுக்கு முன்பு என் அம்மாவிடம் போனில் புகார் சொல்லியுள்ளார். என்னிடம் சொன்னவாறே என் அம்மாவிடமும் சொல்லியுள்ளார். எதிரியின் அம்மாவான என் சித்தியிடம் இந்த விபரங்களை சொல்லுமாறு நான் என் அம்மாவிடம் சொன்னேன். அதற்கு என் அம்மா டயம் பார்த்து சொல்லிக் கொள்கிறேன். சித்தி அதை சுருக் என்று எடுத்துக் கொள்வார். அடுத்து எதிரி வரும் போது சொல்லுமாறு சொன்னார். என் மனைவியிடம் இந்த விபரத்தை அம்மா சொன்னார். 31.07.2015க்கு 3 நாட்களுக்கு முன்பு தான் இந்த விபரங்களை சொன்னாள். 31.07.2015 அன்று பிள்ளைகள் ஸ்கூலுக்கு போய் விட்டார்கள். அன்று

ஆடி வெள்ளி என்பதால் நானும், என் மனைவியும் கோவிலுக்கு போய் விட்டு, காலை 11.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். என் மனைவியை வீட்டில் விட்டு 12.00 மணிக்கு வேலைக்கு போய் விட்டேன். அன்று எனக்கு மாட்டுத்தாவணிக்கு அருகில் உள்ள ஆர்.டி.ஓ அலுவலகத்தில் காண்ட்ராக்ட் வேலைக்கு வந்து விட்டேன். நான் பைக்கில் சென்று கொண்டிருந்த போது, 12.20 மணி அளவில் என் மனைவி எனக்கு போன் பண்ணினார். டி.வி. ரிப்பேர் பார்ப்பதற்கு ஒருத்தர் வந்துள்ளதாக கூறினார். அப்போது அவரிடம் கேட்டதற்கு டி.வி.ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்றும், ரூ.125 சர்வீஸ் சார்ஜ் மட்டும் என் மனைவியிடம் நான் போனில் சொல்லியவாறு கொடுத்தனுப்பினார். என் மனைவியிடம் அதன் பிறகு சின்ன பொண்ணு ஸ்வந்திகா ஸ்கூல் முடிஞ்சு வந்து விடும் என்றும், கீழே போய் கூட்டி வருமாறும் கூறினேன். அவளும் சரி என்றாள். வேலை முடிஞ்சு சாயந்தரம் 4.10க்கு நான் வந்தேன். வர்றப்ப ஸ்பிரிங் கேட்டு மூடியிருந்தது. தலைவாசலின் மரக்கதவு திறந்திருந்தது. நான் வீட்டில் சென்று பார்த்த போது என் சின்ன மகள் நின்று கொண்டிருந்தாள். அப்போது வீடு பூராவும் மஞ்சள் பொடி தூவியது போல் இருந்தது. பாப்பாதான் பொடியைப் போட்டு விளையாடிக் கொண்டிருந்திருப்பாள் என நினைத்து, பாப்பாவை திட்டிக் கொண்டே பெட்ரூமுக்கு போனேன். பெட்டில் என் மனைவி மல்லாக்க படுத்திருந்தாள். சேலையும், பாவாடையும் முழங்கால் வரை ஏறி இருந்தது. நான் அசந்து தூங்குவதாக நினைத்து, என் சின்ன பொண்ணை அழைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தேன். அப்போது சோபாவின் சைடு, கீழே மற்றும ஹாலில் சோபாவைச் சுற்றி ரத்தமாக கிடந்தது. என்னமோ நடந்திருக்குது என்று நினைத்து மறுபடியும் பெட்ரூமிற்கு போனேன். என் மனைவியை எழுப்பி பார்த்தேன். அவர் எழுந்திருக்கவில்லை. தலையை பிடித்து தூக்கினேன். அப்போது எழுந்திருக்கவில்லை. தலையணை முழுவதும் ரத்தமாக இருந்தது. என்ன ஆச்சு பாப்பா எழுந்திரு என்று எழுப்பினேன். அவர் எழுந்திருக்கவில்லை. என் சத்தம் கேட்டு, பக்கத்து வீட்டில் குடியிருந்த சங்கீதாவும், அவர் அம்மாவும் ஓடி வந்தார்கள். அப்போது நான் மனைவியை ஹாலுக்கு தூக்கி வந்த போது, என் மனைவியின் பிளவுஸ் சட்டையெல்லாம் அவிழ்ந்து கிடந்தது. அதை சங்கீதா தான் சரி செய்தார். அந்த சமயத்தில் என் பிரெண்ட் செந்தில்குமார் எனக்கு போன் செய்தார். நான் என் மனைவி கிடப்பதை நான் சொன்னேன். சங்கீதாவை நான் ஹெல்ப் செய்யுமாறு கேட்டேன். என் மனைவியை தூக்கிக் கொண்டு வராந்தாவிற்கு வந்த போது என் பிரண்ட் செந்தில்குமார் வந்து விட்டார். அப்போது பக்கத்து வீட்டிற்கு வாடகை கார் வந்தது. அந்த வாடகை காரில் என் மனைவியை வைத்துக் கொண்டு, நானும், செந்தல்குமாரும் அரிஸ்டோ ஆஸ்பத்திரிக்கு சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதித்து விட்டு உயிரில்லை என சொன்னார். எனக்கு என்ன செய்வதன்றே தெரியாமல் உத்தமபாளையத்தில் உள்ள என் அப்பாவிற்கு போன் செய்தேன். என் அப்பாவிடம் இந்த விபரங்களை சொன்னேன். இரு நாங்க வர்றோம் என்று

சொன்னார். அப்போது என் மனைவியின் கழுத்தை பார்த்த போது, ஒரு ஓட்டை இருந்தது. கழுத்தில் தங்க தாலி செயின் இல்லை. எனக்கு என்ன செய்வதன்று தெரியவில்லை. இது போலீஸ் கேஸ் என்பதால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார்கள். அதன்பிறகு என் மனைவியை தூக்கிக் கொண்டு அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அதற்கு பிறகு என் அப்பா வந்தார். அதன் பிறகு நானும், எனது மாமானாரும் எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். அதன்பிறகு போலீசார் மருத்துவமனைக்கு வந்து பார்த்தார்கள். தாலி செயின், 2 மோதிரம், தொங்கட்டான், 2 லட்சுமி காசு, 2 குண்டு, ஒரு செல்போன் எல்லாம் காணாமல் போயிருந்தது. இந்த பொருட்களை மறுநாள் காவல் நிலையத்தில் நான் பார்த்தேன். அப்போது நான் காவல் நிலையத்தில் இருந்தேன். வெள்ளை மற்றும் சிவப்புக்கற்கள் பதிக்கப்பட்ட தங்க தொங்கட்டான் - 1 அது **அ.சா.பொ.1,** பூ வரைபடம் உள்ள தங்க மோதிரம் -1 அது **அ.சா.பொ.2,** தென்னை மரம் வரைபடம் உள்ள தங்க மோதிரம் - 1 அது **அ.சா.பொ.3,** லெட்சுமி படம் பொறிக்கப்பட்டு 22சி.டி கோல்டு 2006 என எழுதப்பட்ட தாலியில் போடும் தங்க காசு - 1 ஜோடி, அது **அ.சா.பொ.4,** தாலியில் போடக்கூடிய தங்க குண்டு - 1 ஜோடி **அ.சா.பொ.5,** தாலியில் போடக்கூடிய தங்க மாங்கல்யம் -1 **அ.சா.பொ.6** ஆகும். 24.9 கிராம் தங்க செயின் -1 **அ.சா.பொ.7** ஆகும். மேற்படி பொருட்களை நான் நீதிமன்றத்தில் இடைக்காலமாக பெற்றுக் கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பிறகு என் சின்ன மகள் ஸ்வந்திகாவிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். மதியம் விசு சித்தப்பாவும், அவருடைய நண்பரும் வந்தார்கள் என்று சொன்னாள். அம்மா அவர்களுக்கு டீ போட்டுக் கொடுத்து விட்டு, பேசிக் கொண்டிருந்தார்கள். நான் சாப்பிட்டு கொண்டிருந்தேன். சாப்பிட்டு முடித்து நான் தூங்கிட்டேன். அதன் பிறகு எழுந்து தன் அம்மாவை பார்த்த போதுதான் நான் வந்ததாக என் மகள் சொன்னாள். இந்த விபரங்களை எல்லாம் போலீசார் விசாரணையில் ஆய்வாளரிடம் நான் சொன்னேன்.

**எதிரி தரப்பு கு.வி:**

இறந்த கௌரி எனக்கு தாய்மாமா மகள். எதிரி விசுவநாதனுக்கும் என் மனைவி முறைப்பெண். எதிரி விசுவநாதன் எனக்கு சித்தி மகன். எங்கள் வீட்டில் நாங்கள் 3 ஆண்பிள்ளைகள். மணிமாறன் என் மூத்த அண்ணன். முத்துகுமார் என்பவர் என் தம்பி. நானும், என் மனைவியும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். சாட்சி தன்னிச்சையாக எங்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டோம். எங்கள் காதலுக்கு இரு தரப்பு வீட்டிலும் எதிர்ப்பு இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பமும், கௌரி குடும்பமும் 25 வருடங்களாக பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரியல்ல. 7,8 வருடங்களாக பேச மாட்டோம். திருமணம் சமயத்தில் நான் விஸ்வாஸ் புரோமட்டர்ஸ்ல்

சைட் இன்ஜினியராக வேலை பார்த்தேன். சுமார் 7 வருடங்கள் அந்த கம்பெனியில் வேலை பார்த்தேன். விஸ்வாஸ் புரோமோட்டர்ஸ் கம்பெனியில் 2011ஆம் ஆண்டு வரை 15,000 சம்பளம். அப்போது என் வீட்டு வாடகை ரூ.3000 ஆகும். சாப்பாட்டு செலவிற்கு ரூ.3000 ஆகும். என் பிள்ளைகளுக்கு மருந்து செலவு தோராயமாக ரூ.1000 ஆகும். கரண்ட்பில் தோராயமாக ரூ.300, 400 வரும். மோட்டர் பைக் வைத்திருந்தேன். கம்பெனியில் பெட்ரோல் போட்டு விடுவார்கள். இதர சில்லறை செலவுகளுக்கு ரூ.1000 ஆகும். என் சம்பளம் பற்றாததனால்தான் எனக்கும், என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு என்றால் சரியல்ல. கருத்து வேறுபாடு காரணமாக எனக்கும் என் மனைவிக்கு அடிதடி ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒரு முறை என் மனைவியை தேங்காயினால் தலையில் அடித்து, அவருக்கு 7,8 தையல்கள் போடப்பட்டு, எதிரி விசுவநாதன் வீட்டில் அவரது அம்மா அப்பா பராமரிபபில் இருந்தார் என்றால் சரியல்ல. 2-வது குழந்தைக்கு என் மனைவி கர்ப்பம் தரித்தவுடன் என் மீது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக விசுவநாதன் வீட்டில் போய் இருந்தார் என்றால் சரியல்ல. என் மனைவி 2-வது குழந்தைக்கு கர்ப்பம் தரித்து, டெலிவரி சமயத்தில் வாந்தி அதிகமாக இருந்ததால் எதிரி வீட்டில் இருந்தார். அந்த சமயத்தில் கூட அவருக்கு மருந்து மாத்திரை கூட எதிரி வீட்டினர்தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான்தான் கம்பத்தில் இருந்த மருந்து வாங்கி பஸ்சில் குடுத்துவிட சொல்வேன். நான் மதுரைக்கு வந்த பிறகு 4,5 வீடுகள் வாடகைக்கு மாறினேன். நான் வாடகை வீட்டுக்கு மாறும் போதெல்லாம் எதிரியும், அவரது பெற்றோர்களும்தான் உதவி செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது மாமனார்தான் உதவி செய்தார். நான் சிவில் என்ஜினியர் என்பதால் என்னிடம் நிறைய கொத்தனார், நிமிந்தாள், சித்தாள் வேலை பார்ப்பார்கள். நானும், என் மனைவியும் தங்கியிருந்த முத்துசெல்வி இல்லம் ஒரு காம்பௌண்ட் உள்ள வீடாகும்.தரைத்தளத்தில் 3 வீடுகளும், முதல் தளத்தில் 3 வீடுகளும் உள்ளது. தரைத்தளத்தில் உள்ள முதல் வீடு முத்துப்பாண்டி வீடு என்றால் எனக்கு பெயர் தெரியாது. 2-வது வீட்டில் யார் இருந்தார்கள் என்று தெரியாது. 3-வது வீடு ஜான் வீடு என்றால் எனக்குத் தெரியாது. முதல் தளத்தில் முதல் வீடு கார்த்திக் வீடு என்றால் சரிதான். 2-வது வீடு சங்கீதா வீடு என்றால் சரிதான். 3-வது வீடு நான் தங்கியிருந்த வீடு என் வீடு. எனக்கும், என் மனைவிக்கும் சரிவர உறவு இல்லாமல் கருத்து வேறுபாடு இருந்த காரணத்தினாலும், நான் வீட்டிற்கு அடிக்கடி வராத காரணத்தினாலும், எனக்கு தரைத்தளத்தில் இருந்தவர்கள் யார் என்றே தெரியவில்லை என்றால் சரியல்ல. மறைமறைநகர், நேருநகர் குடியிருப்போர் நலச்சங்கம் உள்ளது. அந்த சங்கத்தின் சார்பாக எல்லா தெருக்களிலும் சி.சிடி.வி கேமரா பொருத்தியிருந்தார்கள் என்றால் தெரியாது. நான் அந்த பகுதிக்கே சரிவர போகாததால்தான் சி.சி.டி.வி கேமரா இருப்பதே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருந்த வீட்டில் காம்ப்வுண்ட் சுவரில் கிரில் கேட் இருந்தது. அந்த கேட்டை திறந்து மூடும் போது, கீழ்தளத்தில் உள்ளவர்களுக்க சத்தம் கேட்கும். எங்கள் வீட்டிற்கு வர வேண்டும் என்றால் அந்த கேட்டை திறந்துதான் வர வேண்டும். அந்த கேட்டை ஒட்டிதான் மாடிக்கு போவதற்கான வழி உள்ளது. கார்த்திக் வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் அங்கிருந்த எல்லா வீடுகளுமே வடக்கு

திசையை நோக்கி இருந்தது. என் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் கார்த்திக் வீட்டைத்தாண்டிதான் செல்ல வேண்டும். நான் குடியிருந்த வீட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கிரில் கேட்டும், மரக்கதவும் உண்டு. என் பிள்ளைகள் படித்த பள்ளியின் பெயர் மரியா மாண்டிசோரி. நான் என் பிள்ளைகளை பள்ளிக்கு பைக்கில்தான் கூட்டிச் செல்வேன். நான் வேலைக்கு எத்தனை மணிக்கு கிளம்புவேன் என்றால் நான் காண்டிராக்ட் வேலை பார்ப்பதால் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு மாதிரி செல்வேன். சிவில் காண்ட்ராக்ட் வேலை என்பது வருடம் முழுவதும் கிடையாது. அதனால் எனக்கு போதிய வருமானம் கிடையாது என்றும், அதன் நிமித்தம் எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு என்று சொன்னால் சரியல்ல. 31.07.2015 அன்று டி.வியில் ஸ்பீக்கரில் குறைபாடு இருந்தது. அதை சரி செய்ய சாம்சங் கம்பெனியில் இருந்த அருண் என்ற மெக்கானிக் வந்தார். அருண் டி.வியை பார்த்து விட்டு உடனே கிளம்பி விட்டார். இதை என் மனைவி சொன்னார். ஸ்பிக்கரில் குறைபாடு இருந்ததால் அதை பார்த்து விட்டு உடனே கிளம்பி விட்டார். அருண் சுமார் 10 நிமிடங்கள் வீட்டில் இருந்திருப்பார். என் மனைவி டி.வி.மெக்கானிக் வந்தவுடன் போன் பண்ணினார். அப்போது மணி 12.20. டி.வி மெக்கானிக்கு ஒரு 5 நிமிடத்திலேயே பணம் கொடுக்க சொல்லி என் மனைவியிடம் சொன்னேன். அருண் சென்றவுடன் என் மனைவி என்னிடம் பேசவில்லை. அருண்குமார் என்பவரை போலீசார் காவலுக்கு எடுத்து விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. அ.சா.1 புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். இப்படித்தான் புகார் கொடுக்க வேண்டும் என்று யார் சொன்னார்கள் என்றால் நான் காவல் நிலையத்தில் வைத்து புகார் எழுதினேன். புகார் நான்தான் எழுதினேன். புகார் இப்படித்தான் எழுத வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. நடந்த சம்பவத்தை நான் புகாரில் எழுதினேன். என் புகாரை ஒரு ஏட்டைய்யா வாங்கினார். நான் செல்லும் போது, பேப்பர், பேனா பென்சில் கொண்டு செல்லவில்லை. அது காவல் நிலையத்தில்தான் கொடுத்தார்கள். என் மனைவி இறந்ததால் நான் படபடப்பாகத்தான் இருந்தேன். படபடப்பாக இருந்த நான் எப்படி நிதானமாக புகார் எழுதினீர்கள் என்றால் நான் நிதானமாக புகார் எழுதவில்லை. புகார் எழுதும் போது, பதட்டமாக இருந்ததால் அடித்து திருத்தி எழுதினேன். என் வீட்டில் நான் வந்து பார்த்த போது, ரத்தக்கறையாக இருந்ததை பார்த்து போலீசில் சொல்ல வேண்டும் என்று நினைக்கவில்லையா என்றால் அப்போது எனக்கு பதட்டமாக இருந்தது. போலீசார் விசாரணையில் அரிஸ்டோ மருத்துவமனைக்கு போகும் போது, என் மனைவியின் கழுத்துக்கு கீழே கத்திக்குத்து காயம் இருந்தது என்று சொன்னேன். கழுத்தில் ஓட்டை இருந்ததால் நான் அதை கத்திக்குத்து காயம் என்று சொன்னேன். 2-வது எதிரி பயன்படுத்தியதாக சொல்லும் கத்தி நான் வாங்கி கொடுத்தது என்றால் சரியல்ல. அதனால்தான் அதை கத்திக்குத்து காயம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் இறந்த 2-வது எதிரி என்னிடம் வேலை பார்த்த கொத்தனார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1-வது எதிரிக்கும், 2-வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் தம்பி முத்துக்குமாருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சுமார் 9 வருடம் இருக்கும். என் தம்பி முத்துக்குமார் கல்யாணத்திற்கு நானும், என் மனைவியும் செல்லவில்லை. அந்த நேரம் நான் குடித்து விட்டு வந்து என் மனைவியை

அடித்து எதிரி விசுவநாதன் வீட்டிற்கு அனுப்பி விட்டேன் என்றால் சரியல்ல. நான் தொடர்ச்சியாக புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவன் என்றால் சரியல்ல. நான் வாரந்தோறும் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. எதிரி விசுவநாதன் என் மனைவிக்கு கொழுந்தன் என்ற முறையில் நன்கு அன்பாக பழகுவார் என்றால் சரியல்ல. முறைப்பெண்ணுடன் எதிரி பழகுவது பிடிக்காமல் மனைவியிடம் சண்டையிட்டு வந்தேன் என்றால் சரியல்ல. என் மனைவியின் மீதும், விசுவநாதன் மீதும் பழிவாங்க வேண்டும் என்ற குரோதத்தில்தான் இந்த புகாரை கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. எதிரி விசுவநாதனிடம் தொழில் தேவைக்காக அவ்வப்போது கடன் வாங்குவேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரியிடம் வாங்கிய கடனை திரும்ப கொடுப்பதற்காகத்தான் அன்றைய தினம் எதிரியை வீட்டிற்கு வரச் சொன்னேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் 12.20க்கு பிறகு எனது மொபைல் சுவிட்ச் ஆப் ஆகியிருந்தது என்றால் சரியல்ல. 31.07.2015 அன்று நான் சொல்லிதான் எதிரி விசுவநாதன் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. வீட்டிற்கு வந்த விசுவநாதனுக்கு என மனைவி டீ போட்டுக் கொடுத்தார். டீ போட்டுக கொடுத்த பாத்திரம் சிங்க்ல் அப்படியே இருந்தது. இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 1 சில்வர் பாத்திரம், 2 டம்ளர் இருந்தது. அந்த பாத்திரம் எப்படி இருந்தது என்று எனக்கு நினைவில்லை. அன்றைய தினம் வீட்டிற்கு வந்த விசுவநாதன் எனக்கு போன் பண்ணினார் என்றும், என் மனைவியும் எனக்கு போன் பண்ணினார் என்றும் ஆனால் நான் ரெஸ்பான்ஸ் பண்ணவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீதும், என் மனைவி மீதும் குரோதம் கொண்டு 2-வது எதிரி முத்துக்குமாரை நான்தான் வீட்டிற்கு அனுப்பி என் மனைவியை கொலை செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக சாயங்காலம் 4.30 மணிக்கு சைட்டில் இருந்து வீட்டிற்கு வந்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நாளான மதியம் 1.00லிருந்து 4.00 மணி வரை அந்த பைபாஸ் பகுதியில்தான் நான் இருந்தேன் என்றால் சரியல்ல. மதியம் 2.30 மணிக்கு எனது நண்பர் செந்தில்குமாரை பைபாஸ் ரோட்டில் சந்தித்தேன் என்றால் சரிதான். இந்த கொலையை நான்தான் திட்டமிட்டு செய்ததால் அந்த சமயத்தில் நான் பைபாஸ் ரோட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. என் வீட்டில் இருந்து எஸ்எஸ்காலனி காவல் நிலையம் 2 கி.மீ தூரம் இருக்கும். என் வீட்டில் இருந்து காவல் நிலையம் போவதற்கு 10,12 நிமிடங்கள் ஆகும். உடனே ஏன் காவல் நிலையம் போகவில்லை என்றால் நான் பதட்டமாக இருந்தேன். மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று சொன்னதால், மருத்துவமனைக்கு சென்று விட்டு அதன்பிறகு காவல் நிலையம் சென்றேன். பொதுவாக குழாயடிச் சண்டையில் பெண்கள் சண்டை போடும் போது 100க்கு போன் செய்கிறேன் என்று சொல்வார்கள். நான் ஏன் 100க்கு போன் பண்ணவில்லை என்றால் பதட்டமாக இருந்ததால் போன் செய்யவில்லை. நான் உண்மையிலேயே கொலை செய்ததால் தடயங்களை மறைப்பதற்காக நேரத்தை எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. வீட்டிற்கு வந்து என் மகளை பார்த்தவுடன் என் மனைவியை பார்த்து விட்டு வெளியே வரும் போது 4.10 மணி இருக்கும். என் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் இருக்கிற சங்கீதா எங்கு வேலை பார்க்கிறார் என்று தெரியாது. சங்கீதா தர்ஷன் பேட்ரிக் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார் என்றால் எனக்குத் தெரியாது.

சம்பவத்தன்று சங்கீதா வீட்டிலேயே இல்லை என்றும், அவர் வேலைக்கு சென்றிருந்தால் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த அன்றைய தினம் எனக்கு கைகளிலும், கால்களிலும் காயங்கள் இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு கைகளிலும், கால்களிலும் காயங்கள் இருந்தது என்றும், அதற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு 4.30 மணிக்கு போன் பண்ணினேன். என் மாமானாருக்கு நான் பேசவில்லை. என் மாமானார் வந்தால் என் மனைவியை நான் கொலை செய்து விட்டேன் என்று சந்தேகப்படுவார் என்பதால்தான் என் மாமானாருக்கு போன் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா, என் மாமானார், என் அண்ணன், தம்பி அனைவரும் மருத்துவமனைக்கு வரும் போது 7.00 மணி இருக்கும். நான் கொண்டு சென்ற வாடகை கார் யாருடையது என்று தெரியாது. அந்த டிரைவர் பேரும் தெரியாது. அந்த வாடகை காரை அன்றையதினம் இரவு 9.00 மணி வரை வைத்திருந்தேன். அது வரை என் மனைவியின் பிரேதம் என் கட்டுப்பாட்டில் காரில் இருந்தது. அந்த காரை யார் வாடகை கொடுத்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. என் அப்பா கொடுத்திருக்கலாம். என் அம்மா, அப்பா உத்தமபாளையத்தில் இருக்கிறார்கள். என் மாமானார், மாமியார் கோம்பையில் இருக்கிறார்கள். என் அண்ணன் தேனியிலும், தம்பி உத்தமபாளையத்திலும் இருக்கிறார்கள். தேனியில் இருந்து பாளையமும், கோம்பையும் வேறு வேறு பாதைகள் என்றால் சரியல்ல. கோம்பையில் இருந்து பாளையம் 5 கி.மீ தூரம் இருக்கும். பாளையத்தில் இருந்த தேனி 30 கி.மீ தூரம் இருக்கும். தேனியில் இருந்து மதுரை ஆரப்பாளையம் வரை சுமார் 70 கி.மீ தூரம் இருக்கும். மதுரைக்கு முதலில் வந்தது என் அம்மா, அப்பா, மாமானார், மாமியார் வந்தார்கள். இவர்கள் எல்லாரையும் ஒருங்கிணைத்தது என் அப்பாதான். என் அப்பாவிற்கு நான் 4.30 மணிக்கு தகவல் சொன்னேன். உடனடியாக என் அப்பா என் மாமானாருக்கு தகவல் சொன்னார். கோம்பையில் இருந்து பாளையத்திற்கு எத்தனை மணிக்கு என் மாமானார் வந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. கோம்பையில் இருந்து எனது மைத்துனருடைய சொந்த காரில் என் மாமானார் வந்தார்கள். அந்த காரை ஓட்டி வந்தது ஒன்று விட்ட மச்சினன். என் அம்மா, அப்பா, மாமானார், மாமியார், ஒன்று விட்ட மைத்துனர் என்னை அரசு மருத்துவமனையில் பிணவறைக்கு செல்லும் கேட் அருகில் சந்தித்தார்கள். நான் பிணவறைக்கு நான் போகவில்லை. போக்குவரத்து எளிதாக இருக்கும் என்பதால் பிணவறைக்கு அருகில் உள்ள கேட் அருகில் நின்றிருந்தேன். எனக்கு பிணவறை என்றே தெரியாது. என் மனைவியை அரசு மருத்துவமனையில் சேர்க்கவில்லை. அரசு மருத்துவமனையில் பிணவறைக்கு நேரடியாக கொண்டு செல்ல முடியாது. நான் இருந்த இடம் தங்கரதம் என்றால் அந்த ரோடு டிராபிக் எளிதாக இருக்கும் என்பதால் அந்த இடத்தில் நின்றேன். அரசு மருத்துவமனையில் என் மனைவியை சேர்க்கும் போது, தோராயமாக இரவு 9.00 மணிக்கு இருக்கும். நான் சேர்க்கும் போது அரசு மருத்துவமனையில் யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. யார் கையெழுத்து போட்டார்கள் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கையெழுத்து போட்டேனா என்று நினைவில்லை. என் மனைவியை அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்து விட்டு, நான் மறுநாள் காலையில்தான் பார்த்தேன். அரிஸ்டோ மருத்துவமனையில் எண்ட்ரி எதுவும்

போடவில்லை. அரிஸ்டோ மருத்துவமனையில் என் மனைவியை பரிசோதித்த மருத்துவர் யார் என்று தெரியவில்லை. என் மனைவியை அரிஸ்டோ மருத்துவமனையில் 5 நிமிடம் பார்த்தார்கள். போர்டிகோவில் காரில் வைத்தே பரிசோதித்தார்கள். அரிஸ்டோ மருத்துவமனையில் பணம் செலவழிக்கவில்லை. அரிஸ்டோ மருத்துவமனை என்பது நான் உருவாக்கிய கதை என்றால் சரியல்ல. தடயங்களை மறைப்பதற்காக என் மனைவியை அரிஸ்டோ மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் சொல்வது சுத்த பொய் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டில் மிளகாய் பொடி மஞ்சள் பொடி எங்கிருக்கிறது என்று எனக்கும், என் மனைவிக்கும்தான் தெரியும். நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் சுமார் 10 முறை விசாரித்திருப்பார்களா என்றால் கூடவே இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, வாக்கு மூலங்களில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தீர்களா என்றால் எனக்கு வாக்குமூலம் என்றால் என்ன என்று தெரியாது. உண்மையிலேயே போலீசார் என்னை கஸ்டடியில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எதிரிகள் விசுவநாதனும், முத்துக்குமாரும் அடிக்கடி வீட்டிற்கு வருவார்கள் என்று சொல்லியுள்ளேன். நான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் எதிரிகள் இருவரும் வீட்டிற்கு வந்திருந்த போதிலெள்ளாம் என் மனைவிக்கு டாய்லெட் போக முடியவில்லை என்றும் இடையூறாக இருப்பதாக சொல்லவில்லை. நான் புகார் கொடுக்க போயிருந்த சமயத்தில் என் பிள்ளைகள் இருவரும் பக்கத்து வீட்டில் இருந்தார்கள். நான் புகார் கொடுத்து விட்டு 9.30 மணிக்கு வந்தேன். நான் வீட்டிற்கு வரும் போது என் 2 குழந்தைகளும், பக்கத்து வீட்டுக்காரர்களும் இருந்தார்கள். உண்மையிலேயே சம்பவம் நடந்த அன்று இரவு என் குழந்தைகள் இருவரும் விசுவநாதன் வீட்டிலும், அவர் பெற்றோர்கள் வீட்டில் இருந்தார்கள் என்றால் அது அதற்கு பிறகாகும். என் அம்மா அப்பா அண்ணன், தம்பி அனைவரும் அரசு மருத்துவமனையிலேயே இருந்தார்கள். என் மனைவிக்கு வளையல் அணியும் பழக்கம் உண்டு. சம்பவத்தன்று என் மனைவி கண்ணாடி வளையல் அணிந்திருந்தாள் என்றால் சரியல்ல. மெட்டல் வளையல் போட்டிருந்தார். அந்த வளையல்களை போலீசார் எடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வளையல்களையும், காலில் அணிந்திருந்த மெட்டியையும் அரசு மருத்துவமனையில் வெட்டி எடுத்து என் அப்பாவிடம் கொடுத்தார்கள். கான்கிரீட் வீட்டில் ஒரு பொருளை கீழே போட்டால் டம் என்று கேட்கும். 6 வீடுகள் கொண்ட ஆர்.சி. கான்கீரீட் வீட்டில் இவ்வாறான சம்பவம் நடந்திருந்தால் அக்கம்பக்கத்தில் உள்ள வீடுகளுக்கு சத்தம் கேட்டிருக்கும் என்றால் இது பற்றி எனக்கு பதில் சொல்ல தெரியாது. நான் சிவில் என்ஜினியரிங் படித்துள்ளதால் ஆர்.சி கான்கிரீட் போட்ட வீட்டில் பொருள் விழுந்திருந்தால் எவ்வாறு சத்தம் கேட்கும் என்று சொல்லிக் கொடுத்துள்ளார்கள். என் வீடு ஒரு ஹால், கிச்சன், ஒரு பெட்ரூம், ஒரு டாய்லெட் உள்ள அமைப்பாகும். என் வீட்டில் உள்ள ஹாலில் பெரிய ஜன்னல் உள்ளது. அந்த ஜன்னலை திறந்து பார்த்தால் வெளியே தெரியும். அந்த ஜன்னல் கதவு ஒரு கதவா, இரண்டு கதவுகள் கொண்டதா என்று எனக்கு நினைவில்லை. நான் அடிக்கடி வீட்டிற்கு போகததால்தான் அந்த ஜன்னலின் கதவுகளை பற்றி எனக்கு தெரியவில்லை என்றால்

சரியல்ல. என் பெட்ரூம் வாசல் கிழக்கே பார்த்ததாகும். எங்க ஹாலில் இருந்து பெட்ரூமை பார்க்க முடியாது. தலைவாசலில் இருந்தால் பெட்ரூம் பார்க்க முடியும். நான் பார்க்கும் போது என் மகள் பெட்ரூம் வாசலில் நின்று கொண்டிருந்தாள். கிச்சனுக்கும், பெட்ரூமுக்கும் சிறிய நடைபாதை உள்ளது. என் மகள் அந்த சிறிய நடைபாதையில் நின்று கொண்டிருந்தாள். திட்டமிட்டு நூதன முறையில் என்னால் கொலை செய்யப்பட்டதால்தான் அக்கம்பக்கம் சத்தம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. கிச்சன் சிங்கில் ரத்தம் எதுவும் இல்லை. என் வீட்டிற்கு தலைவாசலில் திரைச்சீலை போட்டிருக்கிறோமா என்று நினைவில்லை. என் மனைவி மீதும், விசுவநாதன் மீதும் சந்தேகப்பட்டு விசுவநாதனுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செய்தித்தாள் வெளியே போனால் படிப்பேன். செய்தித்தாளில் என் மனைவி கொலை சம்பந்தமாக கணவர் கைது என்று செய்தி வந்தது. என்னை கைது செய்யவில்லை. பேப்பரில்தான் வந்தது. அவ்வாறு செய்தித்தாள்களின் பொய்யான செய்தியைப் போட்டதாக நான் அவதூறு வழக்கு போடவில்லை. நான் அந்த மனநிலையில் இல்லை. (சாட்சியிடம் வெள்ளைப் பேப்பரில் எழுதும்படி கேட்கப்பட அதற்கு சாட்சி சம்மதம் தெரிவித்ததால் நீதிமன்றத்தின் முன்பு வழக்கறிஞர் சொல்ல சொல்ல எழுதினார்.) எதிரி வழக்கறிஞர் சொல்ல சொல்ல எழுதிய பேப்பர் **எ.சா.ஆ.1** ஆகும். அ.சா.1 புகாரில் உள்ள எனது கையொப்பமும் தற்போது எழுதி கையொப்பமிட்ட எனது கையொப்பமும் வேறுபாடு உள்ளதென்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் என் மனைவி பி.எஸ்ஸி, பி.எட் படித்து விட்டு வீட்டில் சும்மாதான் இருந்தார் என்று சொல்லியுள்ளேன். என் மனைவியின் மீதும், எதிரியின் மீதும் நடத்தையில் சந்தேகம் இருந்ததால் என் மனைவியை அசிங்கப்படுத்த வேண்டும் என்ற தவறான நோக்கத்தில்தான் புகாரில் சொல்லாத என் மனைவியை குறித்து அலங்கோலமாக இருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவத்தை நான் செய்து விட்டு எதிரி மீது பழியை நான் போடுகிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.